**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,

சார்பு நீதிபதி, மானாமதுரை

2026ம் வருடம் மார்ச் மாதம் 07ம் நாள் சனிக்கிழமை

**இடைக்கால மனு எண்.6/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.278/2019**

முத்துப்பாண்டி ... மனுதாரர்/3ம் பிரதிவாதி

..எதிர்..

1. அமுதாராணி
2. சசிகலா ...1, 2 எதிர்மனுதார்கள்/ வாதிகள்

3. கருப்பணன் (இறப்பு)
4. பாண்டி
5. முத்துலெட்சுமி
6. பாலமுருகன்
7. முத்துப்பாண்டி
8. பாண்டியம்மாள்
9. செல்வி
10. வெண்ணிலா
11. மகாராசா
12. பாண்டி
13. செல்வம்
14. ராஜேஸ்வரி
15. ராக்கு
16. பாண்டிமுத்து
17. பாக்கியம்
18. பழனி
19. முத்துப்பாண்டி

...3 முதல் 19 எதிர்மனுதார்கள்/
1, 2, 4, முதல் 18 பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 07.02.2026–ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ராஜகோபால் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 4, 6, 7, 9, 11 முதல் 17ம் எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஸ்ரீதர் அவர்கள் முன்னிலையாகியும், 5, 8, 10 எதிர்மனுதார்களுக்கு எதிராக அசல் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், 18, 19ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மாசிலாமணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான

## உத்திரவு

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்திரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 3(1) மற்றும் பிரிவு 151 சிபிசி–யின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்பொழுது தான் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றது என்றும் அவற்றை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளதாகவும் மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும் மேற்படி ஆவணங்களை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் மனு அசல் வழக்கு விசாரணையை வீண் காலதாமதப்படுத்துவதற்காக போடப்பட்ட மனு என்றும் மேற்படி மனுவில் ஆவணங்கள் அனைத்தும் தற்சமயம் கிடைக்கப் பெற்றது என்று பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டதற்கான தெளிவான காரணங்கள் எதுவும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும் மேலும் மேற்படி ஆவணங்களும் எங்கு இருந்து கிடைக்கப் பெற்றது என்பதையும் தெளிவாக குறிப்பிடவில்லை என்றும் எனவே இந்த மனு தள்ளுபடிக்கு உரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**4)** 4, 6, 7, 9, 11 முதல் 19ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவிற்கு எதிர்உரை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்பொழுது தான் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றது என்றும் மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்றும் மேற்படி ஆவணங்களை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் போன காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனு மனுதாரரால் அசல் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்று

பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கினை காலதாமதப்படுத்துவதற்காக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்று கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணங்கள் ஏற்புடையதா இல்லையா என்பதை அசல் வழக்கில் முழு விசாரணைக்கு பின்பு முடிவு காண வாய்ப்புள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது என்று கூறப்பட்டுள்ளதையும் மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்று கூறப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் விதமாக இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07ம் நாளான இன்று என்னால் இந்த உத்திரவு அவையறிய பகரப்பட்டது.

SHUNMUGA KANI
Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.07 17:57:26 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் | : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் | : | இல்லை |

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.07 17:57:36 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.